**அளவ்வ பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவ்வ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அளவ்வ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேசசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைகள் தொடர்பில் விஷே நிதி ஒதுக்கீடு உட்படும்.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய சபையின் நிதியறிக்கை முன்னைய வருடத்துடன் ஓப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படல் வேண்டுமென நிதி அறிக்கைகளில் உற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1. கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சபையின் 16 காணி கட்டிடங்கள் அபிவிருத்திககாக செலவிடப்பட்ட ரூபா 10,968,377 பெறுமதியான தொகை மூலாதனமாக் கப்பட்டிருக்கவில்லை. | 2021 நிதி கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காணி கட்டிட அபிவிருத்திககாக செலவிடப்பட்ட தொகைகள் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1996 மற்றும் 2011 ஆம் வருடங்களில் காணி ஏலவிற்பனைகளின் மூலம் கிடைத்த 03 ரூட் 31.3 பேர்சர்ஸ் அளவு 02 காணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 நிதி கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காணிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குறிய முத்திரைக்கட்டணம் ரூபா 21,910,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய முத்திரைக்கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேணடும். |

### 1.6.2 நிகழத்தக்க செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சபைக்கு எதிராக 04 வெளிநபர்களினால் வயல் காணிகள் மண் நிறப்புவது மற்றும் காணி உரிமை தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அவ்வழக்கு தொடர்பில் நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், இது தொடர்பில் சபை நிதியத்தினால் ரூபா 143,480 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தீர்க்கப்படாத வழக்குகள் தொடர்பில் எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | நிகழத்தக்க செலவுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,521,360 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,520,211 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் ஈட்டலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு இறுதி தினத்தில் வரி மற்றும் வீதவரியாக ரூபா 1.009,679 பெறுமதியான தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நாடு முழுவதிலும் காணப்பட்ட கொரோனா தொற்று நிலமை காரணமாக நிலுவை வருமானங்கள் சேகரிக்கும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த முடியாமல் போனதாக. | நிலுவை வருமானங்களை உரிய காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் மாகாணசபை பிரதான செயளாலர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,189,000 மற்றும் முத்திரை வரி ரூபா 37,064,300 ஆன தொகையும் பெறவேண்டியிருந்தது. | விரைவாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | உரிய தொகையை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய கைத்தொழில் கடன்பட்டோன், ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் வைப்புக்களின் மீதிகளின் கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 29,440,490 ஆகும். அவை கால அடிப்படையில் ஒன்று தொடக்கம் 05 வருடங்களுக்கு உட்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,646,683 ஆகவும், 5 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.605,439 ஆகவும் காணப்பட்டது. | மேலும் செலுத்து வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு விஷேட தேவையுடைய கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் மாரகல்கந்த கிராமத்திற்கு ரூபா 5,041,154 செலவீடு செய்து குடிநீர் திட்டமொன்று நிறுவப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 2018 ஒக்தோபர் மாதமளவில் கிராமத்தின் 125 குடும்பங்களுக்கு நீர் வழங்க முடியுமென திட்டமிடப்பட்டாலும், 2020 ஆகஸ்ட் 15 ஆம் திகதியாகும் போது திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களை எட்டியிருந்த போதிலும், பிரதேச மக்களுக்கு நீரைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ரூபா 324,000 செலவிட்டு நிறுவப்பட்ட நீர்ப்பம்பி மற்றும் ரூபா | நீர்க்குழாய்களை பரத்தும் திட்டத்திட்காக நிதி ஆணைக்குழு வினால் 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 3,200,000 நிதி ஒதுக்கீட்டிற்கு அனுமதி கிடைத்துள்ளதுடன் இவ்வருடத்தினுள் திட்டத்தை நிறைவேற்ற முடியுமாகவுள்ளதாகவும் தற்போது பிரதேசவாசிகளுடன் இணைந்து நீர்சபையொன்று அமைத்து நிறுவப்பட்டுள்ள நீர்ப்பம்பியைப் பயன்படுத்தி நீர்த்தாங்கிகள் நிரப்பப்பட்டு அவ்விடத்திலேயே நீர் வினியோகிக்கப்பட்டும் நீர்திருகுபிடி பொறுத்தப்பட்டு அக்கிணற்று நீர் பயன்பாட்டிற்கு பெறப்படுவதாக. | திட்டத்தின் எதிர்பார்த்த பயனை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 231,000 பெறுமதியான 10,000 லீட்டர் கொள்ளலவு 02 நீர்த்தாங்கிகள் என்பன பயன்பாடின்றி 02 வருட உத்தரவாத காலம் நிறைவடைந்திருந்தது. | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு வடமேல் மாகாண அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவல்ல கந்த வீதி சிமெந்துக்கல் பதித்து அபிவிருத்தி செய்வது தொடர்பில் ரூபா 8,393,022 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் போது வீதி 2,672.33 சதுர மீட்டர் பரப்பளவுடன் பாதுகாப்பு சுவர் இடப்பட்ட இடத்தில் சுமார் 18 – 20 சதுர மீடர் (.8+9+1/3) அளவு தாழ்இறங்கி ஒருபக்கம் சரிவடைந்திருந்தது. | இங்கு தாழ்இறங்கிய பகுதியானது நிர்மாணிக்கும் போது வீதி பெரும் பகுதி உடைந்திருந்த பிரதேசமாகும். இதற்குக் காரணம் ஒருபக்கத்தில் குளம் அமைந்துள்ளதனால் இவ்வீதியானது குளக்கட்டாக பயன்படுத்தப்படபடுவதாகும். இங்கு நீர் நிரம்பியுள்ள வேலைகளில் ஈரளிப்பிற்கு உட்படுவதனை தடுக்க முடியாதுள்ளது. | நிர்மாணிப்பு செய்யும் போது உரிய தரத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |